# தவிசாளரின் அறிக்கை

1982 ஜனவரி 01 ஆம் திகதியன்று தேசிய நீரியல்வள முகாமையின் ஆளுநர் சபை பின்வருவோரைக் கொண்டிருந்தது.

அ. மாண்புமிகு அமைச்சரால் செய்யப்பட்ட நியமனம்.

கலாநிதி கிரான் டப்ளியு. ஐயவர்தன, தவிசாளர்
பேராசிரியர் கே. டி. அருட்பிரகாசம்
திரு. ஆர். புவனேந்திரன்
பேராசிரியர் எச். எச். கொஸ்தா
பேராசிரியர் சேஜ் டி சில்வா
திரு. எம். விஸ்வலிங்கம்
கலாநிதி ஈ சி. எம். வாஸ்
கலாநிதி எம். எம். ஜே. டப்ளியு ஹேரத்

ஆ. பதவிவழி உறுப்பினர்கள்

திரு. அநுரா வீரரத்தின
செயலாளர் கடற்றொழில் அமைச்சு
திரு. ஐஸ்ரின் டயஸ்
செயலாளர் கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைசசு
கலாநிதி ஆர். மகாலிங்கம்
நிதி அமைச்சின் பிரதிநிதி
திரு. அலொய் பெர்னன்டோ
பதில் பணிப்பாளர் அதிபதி

1982 ஜனவரி 17 ஆம் திகதியன்று ஆளுநர் சபையின் செயலாளராக திரு. ரி. ரி. ஏ. ஜே. சி. சமரசிங்கா நியமிக்கப்பட்டார்.

1982 ஜுன் 01 ஆம் திகதியன்று கலாநிதி எஸ். கே. ஒனில் பெரேரா முகாமையின் பணிப்பாளர் அதிபதியாக நியமனம் செய்யப்பட்டார்.

ஆளுநர் சபையின் 9வது தொடக்கம் 25 வது 17 கூட்டங்கள் முறையே ஜனவரி 26 ஆம் திகதி, பெப்ரவரி 3 ஆம் திகதி, பெப்ரவரி 17 ஆம் திகதி மார்ச்சு 5 ஆம் திகதி, மார்ச்சு 19 ஆம் திகதி, ஏப்ரல் 7 ஆம் திகதி, ஏப்பிரல் 22 ஆம் திகதி, மே 11 ஆம் திகதி, மே 21 ஆம் திகதி, ஜுன் 4 ஆம் திகதி, ஜுன் 22 ஆம் திகதி, ஜுலை 22 ஆம் திகதி, ஒகஸ்து 12 ஆம் திகதி, செப்தம்பர் 10 ஆம் திகதி, ஒக்டோபர் 8 ஆம் திகதி, நவம்பர் 26 ஆம் திகதி, திசெம்பர் 27 ஆம் திகதி ஆகிய தினங்களில் நடாத்தப்பட்டன.

மீளாய்வுக்குரிய வருடத்தின் போது ஆளுநர் சபைக் கூட்டங்களில் ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்ட மிக முக்கிய விடயம் சில பின்வருமாறாகும்.

(1) ஆபரண கடற்றொழிலுக்கான உலகச் சந்தையின் சாத்தியக்கூறை மதிப்பீடு செய்வதும் ஆபரண கடற்றொழில் கைத்தொழிலை விருத்தி செய்ய இலக்கை தீர்மானித்தலும்.

2. ஆபரணக் கடற்றொழில் பற்றி செய்முறை காட்டும் பண்ணை தாபித்தல்

3. உள்ளவாரான வளங்களின் ஆராய்ச்சி வேலைத்திட்டத்தை வகுத்தல்

4. கடல்சார் சூழலையும் தொடர்பான புவி முறைகளையும் பாதுகாப்பதற்கான " எஸ்காப்" பிராந்திய கருத்திட்டம்.

5. பராக்கிரம சமுத்திரத்தின் சூழலியல் கருத்திட்டத்தை தொடருதல்

6. கடல்சார் உற்பத்திப் பொருட்களின் தரக் கட்டுப்பாட்டு ஆய்வு கூடத்தை தாபித்தல்

7. கப்பல் உடைவுகள் பற்றிய ஆய்வுகள்

8. ஆராய்ச்சி நிலையமொன்றை தாபிப்பதற்காக கல்பிட்டியில் காணியைக் குத்தகைக்கு எடுத்தல்.

9. ஆராய்ச்சி அபிவிருத்தி முயற்சிகள் பற்றிய தேசிய தொழில் பாசறை ஒன்றை நடத்துதல்.

கலாநிதி கிரான் டப்ளியு ஜயவர்தன
தவிசாளர்.

## சாதனை அறிக்கை 1982

1981 ஆம் ஆண்டு செப்தம்பர் மாதத்தில் பாராளுமன்றச் சட்டம் ஒன்றின் கீழ் தேசிய நீரியல்வள முகாமை ஸ்தாபிக்கப்பட்டது. இருப்பினும் ஆராய்ச்சி வேலைத்திட்டத்தை வகுத்தளிப்பதற்கும் அவற்றைச் செயற்படுத்துவதற்கும் கணிசமானளவு காலம் தேவைப்பட்டது. ஏலவேயிருந்த ஒரு சில பிரிவுகளைத் தவிர, ஏனைய பிரிவுகளுக்கான ஆராய்ச்சி வேலைத்திட்டம் வகுத்தளிக்கப்பட்டு அவை முகாமையின் விஞ்ஞான தொழில்நுட்பக் குழுவால் 1982 மே மாதத்தில் அங்கீகாரம் பெற்றன.

1982 ஆம் ஆண்டில் இம் முகாமையின் ஆராய்ச்சிப் பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிக் கருத்திட்டங்களின் பட்டியல் ஒன்றை கீழே தருகின்றேன்.

1. கடல்சார் கடற்றொழில் பிரிவு

(அ) கரையோர உட்கரைக் கடற்றொழில் பற்றிய ஆய்வு கடலட்டை மற்றும் சிறியவலை செவுள்வலை கடற்றொழில் தொழில்முறை

மேற்குக் கரையோரத்தில் கடலட்டை கடற்றொழில் தொழில்முறை ஆரம்பமானவை அடுத்து ஒக்டோபர் மாதத்தில் மட்டுமே கரையோர உட்கரை கடற்றொழில் தொழில்முறை பற்றிய ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) தியூரா கடற்றொழில் தொழில் முறை பற்றிய ஆய்வு.

இக்கருத்திட்ட வேலை [illegible] மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதோடு தொடக்ககட்ட ஆய்வுகளாவன கல்பிட்டியிலிருந்து சிறிந்தை வரையுடமான தீவின் மேற்குப் பகுதியை மட்டும் உள்ளடக்கியிருந்தன. இக்கருத்திட்டத்தின் முக்கிய நோக்கம் தியூரு மீனின் இடம்பெயரும் வடிவத்தை ஆய்வு செய்து பெருமதியான இவ்வளத்தை அதிகளவில் பயனுக்கம் செய்ய முற்படுவதே.

(இ) இறால் கடற்றொழில் தொழில் முறைபற்றிய ஆய்வு.

முகத்துவாரம், நீர்கொழும்பு சிலாபம் ஆகிய இடங்களில் இறால் கடற்றொழில் தொழில் முறை பற்றிய ஆய்வுகள் நடத்தப்பட்டன. பிடிக்கப்படும் இறால்களின் சேர்மானத்தையும் தொகையும் இறாலின் பால், முதிர்ச்சி என்பனவற்றையும் அறிந்து கொள்வதற்காக மாதாந்த மாதிரிகள் எடுப்பது இதில் இடங்கியிருந்தது.

(ஈ) மீன் தொழில்நுட்பவியல் நிறுவகம்.

இம் முகாமை ஒழுங்குபடுத்துவதற்கு முன்னதாக இப்பிரிவு இயக்கத்தில் இருந்து வந்தது. இந்நிறுவகத்தின் ஆராய்ச்சி வேலைத்திட்டங்கள் 1982 முழுவதும் தொடர்ந்து செய்யப்பட்டன. இப்பிரிவால் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பான முன்னேற்றம் பின்வருமாறும்.

(..2)

(அ) கடல்சார் உற்பத்திப் பொருட்கள் தொடர்பான தரக் கட்டுப்பாட்டு வேலை.

இக்கருத்திட்டம் தொடர்பான வேலை தற்போது ஏற்றுமதி செய்யப்பட்டுவரும் கடல்சார் உற்பத்திப் பொருட்களின் தரத்தை மேம்படுத்துவது தொடர்பிலாகும். இது தொடர்பில் கப்பலில் ஏற்றப்படுவதற்கு முன்னதாக, கடல்சார் உற்பத்திப் பொருட்கள் யாவையும் நுண் உயிரியல் பரிசோதனைக்கு உட்படுத்தும் பொருட்டு தனியான ஆய்வு கூடம் ஒன்றைத் தாபிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) பாரம்பரிய கடற்றொழில் உற்பத்திப் பொருட்களின் தரத்தினை அபிவிருத்தி செய்தல்.

பாரம்பரியமான பதனிடப்பட்ட மீன் உற்பத்திப் பொருட்களை அதாவது ஜாடி மீன் போன்றவற்றை தரத்தில்அபிவிருத்தி செய்யும் பொருட்டு, அவற்றின் இருப்பு வைப்புக்காலத்தை நீடிப்பதற்காக நாற்றத்தன்மையும் பூஞ்சாணம் வளருவதையும் தடுக்கும் பொருட்டு இக்கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

(இ) பல்வேறு வகையாக களஞ்சியப்படுத்தும் நிலைமைகளின் கீழ் உடன் மீனின் தரமும் களஞ்சிய ஆயுட்காலமும்.

நீண்டகாலப் பகுதிக்கு உடன் மீனை எந்த நிலைமைகளின் கீழ் களஞ்சியப்படுத்தி வைக்கலாம் என்பதை நிலைநாட்ட இக்கருத்திட்டவேலை சம்பந்தப்பட்டிருந்தது.

(ஈ) தகரத்தில் அடைப்பதற்கு மாற்றீடாக பைக்கற்றில் அடைப்பதற்கான பொருட்களும் முறைகளும்.

இக்கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலையானது, மீன் மற்றும் கடற்றொழில் தொழில் துறை உற்பத்திப்பொருட்களை தகரத்தில் அடைக்கும் கைத்தொழிலில் தகரத்துக்குப் பதிலாக இப்பொருளைக்கொண்டு செய்யப்படும் பைக்கற்றுகள் பாவிக்கப்படுமாதலால், கிருமியழித்தலை தாங்கக் கூடியதான சூட்டைத்தாங்கும் பொருளைக் கண்டுபிடிப்பதை நோக்கமாகக் கொண்டதாகும். இப்பைக்கற்றுகளைப் பாவித்து மிளகாய் சாற்றிலும் தக்காளிச் சாற்றிலும் சாடின் மீனை பைக்கற்றில் இட்டு வைக்கக்கூடிய சாத்தியத்தை தேர்வாய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன.

(உ) பப்பெயின் புறம்லெயின் என்பனவற்றைப் மீன் ஐதரோலிசேற்றைத் தயாரிப்பதில் பாவித்தல்.

காரல் மற்றும் அதுபோன்ற மீன் இனங்களிலிருந்து தயாரிக்கப்படும் மீன் பதார்த்தங்களின் நீரை அகற்றுவதற்கு பப்பெயின், புறம்லெயின் என்பன பாவிக்கப்படலாம். இவை இறுதியாக மரக்கறியிலிருந்து செய்யப்படும் மாமயிட், வெகமைட் போன்றவற்றைப்போல் காணப்படுகின்றன.

(..3)

( ஊ) பொலன்நறுவையில் மீன் பதார்த்தங்களையும் மீன் உணவைச் செய்யும் பொறித் தொகுதியை செயற்பட வைத்தல்.

மேற்சொல்லப்பட்ட பொறித்தொகுதியை இயங்க வைப்பதற்கான தொழில்நுட்ப விடயங்களை கவனிப்பதில் ஆராய்ச்சிப் பதவியினர் ஈடுபட்டிருந்தார்கள். இப்பொறித்தொகுதி 1983 பெப்ரவரி மாதத்தில் தொழிற்படவுள்ளது.

3. உள்நாட்டு நீர்வாழ் வளக் கூறு

1982 ஜூன் தொடக்கம் டிசெம்பர் வரையான காலப்பகுதியில் இப்பிரிவு 3 முக்கிய கருத்திட்டங்களை மேற்கொண்டது. இக்கருத்திட்டங்களின் முன்னேற்றம் பின்வருமாறாகும்.

(அ) புத்தளம் கடனீரேரித் திட்டம்.

நீர் உயிரியல் ஆய்வுகள், கடனீரேரிக் கடற்றொழில் தொழில் முறையின் தற்போதைய நிலையும் வாய்ப்பு வளமும் உவப்பு நிலத் தாவரம் மற்றும் மீனவ மக்களின் சமூக பொருளாதார கணிப்பு போன்ற புத்தளம் கடனீரேரியின் பல அம்சங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கருத்திட்டம் இதுவாகும்.

(ஆ) பொலன்நறுவை மாவட்டத்திலுள்ள பாரிய நீர்நிலைகளின் நன்னீர் மீன் உற்பத்தி பற்றிய ஆய்வுகள்.

பொலன்நறுவையிலுள்ள எமது முக்கிய நீர்நிலைகளின் மீன் உற்பத்தி மட்டத்தை கண்டறிவதற்காக இக்கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பிலான வேலைகள், பிடிக்கப்படும் மீன், முயற்சி, இனச் சேர்மானம், அளவுச் சேகரித்தல் உள்ளடக்கியிருந்தன.

(இ) கருநீலச் சிப்பி வளர்ப்புத் திட்டம்.

திருகோணமலையில் இரண்டு கைமரங்களை ஈடுபடுத்தப்பட்டதையடுத்து 1982 நவம்பரில் இக்கருத்திட்டம் ஆரம்பமானது. கருநீலச்சிப்பி வளர்ப்புத் திட்டம் ஆரம்பமானது. கருநீலச் சிப்பி வளர்ப்புப் பற்றிய விரிவான கருத்திட்ட யோசனைகள் வகுக்கப்பட்டு நிதியளிப்பதற்காக ச.அ.ஆ. நிலைக்கு சமர்ப்பிக்கப் பட்டது. தீவின் கரையோரமாக தோதான வளர்ப்பு இடங்களை தாபிப்பதற் கான தொடக்கக் கட்ட புலனாய்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4. சமுத்திரவியற் கூறு

இம்முகாமையின் கீழ் தாபிக்கப்பட்ட புதிய பிரிவு இதுவாகும். எனவே இப்பிரிவால் மேற்கொள்ளப்படவேண்டிய ஆராய்ச்சிக் கருத்திட்டங்களை அடையாளம் காணவும் வகுக்கவும் அதிகளவு காலம் செலவிடப்பட்டது.

மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் இப்பிரிவு பின்வரும் முயற்சிகளை மேற்கொண்டது.

(அ) ஈரக்கரை இடப்பரப்புகளின் கடற்பொருள் பிரதேசவளர்ச்சி பற்றிய கணிப்பு.

(ஆ) கண்டமேடை உட்பட இலங்கையின் கரையோர இடப்பரப்புகளின் வளங்களின் வாய்ப்புவளத்தை மதிப்பீடு செய்வதற்கான கணிப்பு.

5. புள்ளிவிபரங்களையும் தரவுகளையும் நெறிப்படுத்தல்.

இப்பிரிவால் பின்வரும் கருத்திட்டவேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சிலாபம் கறுப்பன் கருத்திட்டம்

(ஆ) யாழ்ப்பாணம்- காரைநகர் கருத்திட்டம்.

கடற்றொழில் தரவுகளை சேகரிப்பதற்காக பின்பற்றப்படும் முறைகளை மேம் படுத்துவதற்காக இக்கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(இ) அம்பாந்தோட்டை கருத்திட்டமும் சமூகபொருளாதாரக் கணிப்பும்.

மீன்பிடிக்கும் மக்களின் சமூக பொருளாதார தன்மையை தீர்மானிப்பதற்காக நோராட் நிறுவனத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படவிருந்த கருத்திட்டம் இதுவாகும்.

(ஈ) நூலகம்.

இப்பிரிவின் அலுவலர்கள் நூலகத்தை நிறுவுவதிலும் ஈடுபட்டிருந்தார்கள்.

6. சேவைகளும் தொழிற்பாடுகளும்

இம் முகாமையின் ஏனைய பிரிவுகளுக்கு வேண்டிய உதவிகளை வழங்குவதில் இப்பிரிவின் வேலை சம்பந்தப்பட்டதாய் இருந்தது.

7. விசேட கருத்திட்டங்கள்.

மீளாய்வுக்குரிய வருடத்தில் பின்வரும் விசேட கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன

(அ) ஆபரணத்துக்கான கடற்றொழில் தொழில் முறை

(ஆ) பாரம்பரிய நீர்வாழ் உணவுப் பொருட்களை அபிவிருத்தி செய்தல்.

(இ) வெடிமருந்து கொண்டு மீன்பிடித்தல்

(ஈ) கடல்சார் பூங்காக்கள்

(உ) கரையோர இடப்பரப்புகளின் கணிப்பு

(ஊ) தே.நீ.வ.மு.கடனீரேரியை அபிவிருத்தி செய்தல்.

(எ) திமிங்கலங்களும் கடல்சார் முலையூட்டிகளும்.

(ஏ) சூழல் ஆய்வுகள்.

1983 ஜனவரி.

கணக்காய்வாளர் தலைமை அதிபதித்
திணைக்களம்

டொரிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7, இலங்கை.
1984 ஒக்டோபர் 18.

தவிசாளர்,
தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை.

1982 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமையின் கணக்குகள் மீதான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) (இ) பிரிவிற்கமைவான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரிமைக்கமைய 1982 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமையின் கணக்குகளின் கணக்காய்வு எனது பணிப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டது, நிதிச் சட்டத்தின் 14(2)(இ) பிரிவின்படி முகாமையின் ஆண்டறிக்கையுடன் வெளியிடப்படவேண்டுமென நான் கருதும் எனது அவதானிப்புகளாவன பின்வரவுள்ள பந்திகளில் காணப்படுகின்றன. நிதிச் சட்டத்தின் 13(7)(அ) பிரிவிற்கமைவான மிகவும் விரிவான அறிக்கை ஒன்று தவிசாளருக்கும், கடற்றொழில் அமைச்சின் செயலாளருக்கும் நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளருக்கும் [illegible] 1984 ஜுன் 15 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது.

1.2. கணக்காய்வின் விரிவெல்லை

இவ்வறிக்கையில் காணப்படும் கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகளாவன கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளின் மீளாய்வையும் கொடுக்கல்வாங்கல் மாதிரிகளின் முறையான சோதனைகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. அத்தகைய மீளாய்வுகளினதும் சோதனைகளினதும் நோக்கெல்லையும் விரிவெல்லையும் மட்டுப்படுத்தப்பட்ட பதவியினர் வளங்கள் மற்றும் எனக்குக் கிடைக்கக்கூடியதாகவிருந்தநேரம் என்பனவற்றுக்கு உட்பட்டதாக எந்தளவு பரந்த அளவில் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகளாவன கணக்காய்வின் நோக்கெல்லையையும் விரிவெல்லையையும் தீர்மானிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தை கணக்காய்வாளர் அதிபதிக்கு வழங்குகின்றன.

(.....2ஆம்

## 2. கணக்குகள்.

### 2.1. கணக்குகளைச் சமர்ப்பித்தல்.

1982 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான கணக்குகளாவன கணக்காய்வுக்கு 1983 செப்தம்பர் 26 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது. பின்பு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் ரத்துச் செய்யப்பட்டவையாகக் கருதப்படல் வேண்டும் என்ற வேண்டுகோளுடன் திருத்தம் செய்யப்பட்ட கணக்குகளாவன கணக்காய்வுக்கு 1983 தசெம்பர் 15 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டன. இவ்வறிக்கையில் காணப்படும் கருத்துரைகளாவன 1983 திசெம்பர் 15 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் தொடர்பானதாகும்.

### 2.2. அபிப்பிராயம்.

இவ்வறிக்கையில் காணப்படும் கருத்துரைகளின் நிமித்தம் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மீதான அபிப்பிராயத்தை தெரிவிக்க நான் இயலாதுள்ளேன்.

### 2.3. நிதிப் பெறுபேறுகள்.

கணக்குகளின் பிரகாரம் 1982 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டில் முகாமையின் செயற்பாடு , 1981 செப்தம்பர் 16 ஆம் திகதி தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குரிய 2,35,067 ரூபாவுடன் ஒப்பிடுகையில் 39,28,149 ரூபா செலவை மிஞ்சிய வருமானமாகப் பெறுபெற்றுள்ளது. 1983 ஜனவரி மாதத்தில் கிடைக்கப்பெற்றுள்ள 13,00,000 ரூபாவை உள்ளடக்கியதான அரசாங்க உதவுதொகையான ரூபா 78,00,000 முழுவதையும் வருடத்துக்கான வருமானமாகக் கருதி நிதிப்பெறுபேறு கணக்கிடப்பட்டுள்ளது. இருப்பினும் முந்திய காலப்பகுதியில் அரசாங்க உதவுதொகையான 71,34,000 ரூபாவில் 9.53.000 ரூபாவை மட்டுமே கணக்குகளில் வருமானமாகக் கருதப்பட்டிருக்கக் காணப்பட்டது.

பின்வரும் கூற்றறிக்கையானது சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் 1982 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான நிதிப்பெறுபேறுகளையும் 1981 செப்தம்பர் 16 ஆம் திகதி தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குரிய நிதிப்பெறுபேறுகளையும் காட்டுகிறது,

| | 1982 திசெம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டு. | | 1981 செப்தம்பர் 16 தொடக்கம் தசெம்பர் 31 வரையான காலப்பகுதி. | |
|---|---|---|---|---|
| **வருமானம்.** | | | | |
| அரசாங்க உதவுதொகை | 78,00,000 | | 9,53,000 | |
| | 1,500 | 78,01,500 | | 9,53,000 |

கழி– செலவினம்.

| | | | |
|---|---|---|---|
| சம்பளங்களும் படிகளும் | 28,16,459 | | 4,15,728 |
| சபைச் செலவுகள் | 11,708 | | 12,948 |
| உசாவுதல் கட்டணங்கள் | 26,597 | | - |
| உபசரணை | 30,385 | | 584 |
| எரிபொருள் | 38,042 | | 5,016 |
| விளம்பரம் | 73,987 | | 39,054 |
| பாதுகாப்புச் சேவை | 87,537 | | - |
| மின்சாரம் | 1,64,158 | | 60,000 |
| தாபனக் கட்டணங்கள் | 4,13,650 | | 1,51,242 |
| நிருவாகச் செலவுகள் | 2,10,828 | (38,73,351) | 33,361 (717,933) |
| செலவினத்தை மிஞ்சிய வருமானம். | | 39,28,149 | 235,067 |

2.4. நிதி அமைப்பு.

1982 திசெம்பர் 31 ஆம் திகதியன்றிருந்த முகாமையின் நிதி அமைப்பு 1981 திசெம்பர் 31 ஆம் திகதியன்றிருந்த ஒப்பீட்டுடன் கீழே தரப்பட்டுள்ளது.

| | திசெம்பர், 31 ஆந் திகதியன்றிருந்தவாறு | | |
|---|---|---|---|
| | 1982 | | 1981 |
| | ரூ | ரூ | |
| வளங்கள். | | | |
| ஜனவரியில் உள்ளவாறான உதவு தொகை | 71,34,000 | | - |
| கூட்டு. வருடத்தின் போது கிடைக்கப்பெற்றது/செப்தம்பர் 16 தொடக்கம் திசெம்பர் 31 வரையான காலப்பகுதி (மீண்டுவரும் உதவுதொகையும் மூலதன உதவுதொகையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.) | 78,00,000 | | 71,34,000 |
| | 1,49,34,000 | | 71,34,000 |
| கழி- செலவினம். | | | |
| முன்கொண்டுவரப்பட்டமீதி 7,17,933 | | | |
| கூட்டு | | | |
| வருடச்செலவு 38,73,531 | 38,71,851 (45,89,784) | 7,17,933 | (7,17,933) |
| கழி. சில்லறை வருமானம் 1,500 | 1,03,44,216 | | 64,16,067 |

பயனுக்கம்.

| | | | | |
|---|---|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | | 44,33,394 | | 19,290 |
| நடப்புச் சொத்துக்கள் | 62,50,099 | | 65,42,614 | |
| கழி. நடைமுறைப்பொறுப்புக்கள் | 3,39,277 | 59,10,822 | 1,45,837 | 63,96,777 |
| | | 1,03,44,216 | | 64,16,067 |

2.5. நிதிகளின் மூலகங்களும் பிரயோகங்களும்.

மீளாய்வுக்குரிய வருடத்தினது முகாமையின் நிதிகளின்மூலகத்தையும் பிரயோகத்தையும் பின்வரும் கூற்றறிக்கை காட்டுகிறது.

மூலம்.

| | | |
|---|---|---|
| செலவினத்தை மிஞ்சிய வருமானம். | 39,28, 149 | |
| கூட்டு | | |
| நிதியடைவு சம்பந்தமுறாத விடயங்களுக்கான சீராக்கம் தேய்மானம். | 1, 929 | 39,30,078 |

பிரயோகம்

| | |
|---|---|
| நிலையானசொத்துக்கு சேர்க்கை | (44,15,033) |
| கீழே பகுப்புச்செய்யப்பட்டவாறு தொழிற்படு முதலில் குறைவு | (4,85,955) |

தொழிற்படுமுதல் மீதான விளைவு

| | அதிகரிப்பு | குறைவு | |
|---|---|---|---|
| கடனாளிகளின் அதிகரிப்பு | 51,88,696 | - | |
| முற்பணங்கள் வைப்புகளில் அதிகரிப்பு | 54,016 | - | |
| கடன்கொடுப்போர் அதிகரிப்பு | - | 4,261 | |
| செலவுகள் அதிகரிப்பு | - | 1,81,459 | |
| வைப்புகள் அதிகரிப்பு | - | 7,721 | |
| கையிலும் வங்கியிலும் உள்ள பணத்தில் குறைவு | - | 55,35,226 | 4,85,955 |
| | 52,42,712 | 57,28,667 | |

2.6. கணக்குகள் மீதான கருத்துரைகள்.

2.6.1. அரசாங்க உதவுதொகை.

(1) கணக்குகளில் காண்பிக்கப்பட்ட தொகைக்கும் திறைசேரிப் புத்தகங்களில் காண்பிக்கப்பட்ட தொகைக்கும் இடையில் பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

| விடயம், | கணக்கில் காட்டப்பட்ட தொகை | திறைசேரிப் புத்தகங்களில் காட்டப்பட்ட தொகை |
|---|---|---|
| 1982 திசெம்பர் வரையான அரசாங்க உதவுதொகை திறைசேரியில் உள்ள வைப்புக் கணக்கு | 1,49,34,000 | 1,26,81,000 |
| திறைசேரியில் உள்ள வைப்புக்கணக்கு | – | 16,00,000 |
| 1982ல் அரசாங்க உதவுதொகை | 78,00,000 | 65,00,000 |

1983 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற 13,00,000 ரூபாவை மீளாய்வுக்குரிய ஆண்டுக்கான பெறுகை எனக் கணக்கிடப்பட்டதால் இவ்வித்தியாசம் ஏற்பட்டுள்ளது.

(2) உதவுதொகையை முகாமை மூலதனச் செலவினம் மீண்டுவரும் செலவினம் எனத் தனித்தனியாக வகைப்படுத்தவில்லை. ஆனால் அதை வருடத்துக்கான வருமானம் எனக் கணக்கீடு செய்துள்ளது. இருப்பினும் 1982 ஆம் ஆண்டு மதிப்பீடுகளில் உதவு தொகையானது கடற்றொழில் அமைச்சின் கீழ் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | ( 136,-1-01(07) | ரூபா | 36,00,000 |
| மூலதனச் செலவினம் | (136-1-103-11(3) | ரூபா | 45,00,000 |
| | மொத்தம். | | 81,00,000 |

முகாமைக்கு விடுவிக்கப்பட்ட பணம் தொடர்பான திறைசேரியின் கடிதத்தின் பிரகாரம் மூலதனவாக்குப்பணத்துக்கான (136-1-103-11(3) விதிப்பு 55,00,000 ரூபாவும் மீண்டுவரும் செலவினத்துக்கான உதவு தொகை 10,00,000 ரூபாவும் ஆகும். 1983 ஜனவரியில் விடுவிக்கப்பட்ட 13,00,000 ரூபாவும் மீண்டுவரும் வாக்குப்பணத்துக்கு விதிப்பளவு செய்யப்பட்டுள்ளது.

2.6.2. செலவினத்தை மூலதனப்படுத்தல்.

பயணச் செலவுகள் எரிபொருள் கண்ணாடிப்பொருட்கள் மற்றும் நுகர்ச்சிப் பொருட்கள் மீதான செலவினமான 5,51,973 ரூபா கணக்குகளில் பிழையாக மூலதனப்படுத்தப்பட்டுள்ளது.

மூலதனச் செலவினம் வருமானம் என்பன வற்றுக்கிடையான செலவினத்தை வகைப்படுத்துவதற்கான ஒரு கொள்கையை சபை தீர்மானிக்காததும் பிரயாணச் செலவுகள் எரிபொருள் மற்றும் உணவுப் படிபோன்ற செலவுகள், மீண்டுவரும் [illegible] இல்லாதமையால் சம்பந்தப்

2.6.3. அமைச்சிலிருந்து சொத்துக்கள் கைமாற்றம்

1981 செப்தம்பர் 16 ஆம் திகதி தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதிவரையான காலப்பகுதியின் கணக்குகள் மீதான எனது அறிக்கையில் கடற்றொழில் அமைச்சின் மீன் தொழில்நுட்பவியல் நிறுவகத்துக்கும் ஆராய்ச்சிப்பிரிவிற்கும் முன்பு சேர்மதியாகவிருந்த சகல ஆதனங்களும் முகாமையின் வசம் உள்ளதென்றும் அவற்றைப் பாரதீனப்படுத்தும் அமைச்சரின் வர்த்தமானி அறிவித்தல் சட்டத்தின் 35 ஆம் பிரிவிற்கமைய வெளியிடப்படவில்லையென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் இச்சொத்துக்களானவை மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவேண்டும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் மீளாய்வுக்குரிய ஆண்டின்போதும் கூட இது விடயம் தொடர்பாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

2.6.4. சிறுகச் சேர்ந்த செலவினங்கள்.

(1) முன்னைய காலப்பகுதியின் இறுதியிலிருந்த சிறுகச் சேர்ந்த செலவினமான 26,507 ரூபா மீளாய்வுக்குரிய வருட இறுதியில் கூட தீர்க்கப்படாதுள்ளது.

(2)1981,1982 ஆகிய வருடங்களுக்கான கணக்காய்வுக் கட்டணம் கொடுப்பனவுக்கான ஏற்பாடு எதுவும் கணக்கில் செய்யப்படவில்லை.

2.6.5. கணக்காய்வுக்கான சான்று

பின்வரும் கணக்குகளானவை ஒவ்வொரு விடயத்துக்கும் எதிரே காட்டப்பட்டுள்ள காரணங்களின் நிமித்தம் திருப்திகரமாக உறுதிப்படுத்தப்படவோ அல்லது ஏற்றுக்கொள்ளப்படவோ ' ' இயலாதுள்ளது.

| கணக்கு | பெறுமதி | காரணம் |
|---|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் | 44,35,323 | (1) நிலையான சொத்துக்களுக்கான பதிவேடு பேணப்படாதமை.<br>(2) வருடமுடிவில் அல்லது வருடத்தின்போது கைவசம் உள்ள சொத்துக்கள் சரிபார்க்கப்படாதமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) சில்லறைக் கடனாளிகள் | 52,03,296 | (1) கட்டிடங்களை செப்பனிடுவதற்காக அமைச்சுக்குக் கொடுக்கப்பட்ட முற்பணமாக ரூபா 5 மில்லியன் தொடர்பான உடன்படிக்கையும் செலவு மதிப்பீடும் கிடைக்கப் பெறாதமை.<br>(2) துணைப்பதிவுப் புத்தகங்களும் கட்டுப்பாட்டுக் கணக்கும் பேணப்படாதமை.<br>(3) கடன்கள் உறுதிப்படுத்தப் படாதமை.<br>(4) முன்னைய காலப்பகுதியிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட 52,895 ரூபா தொடர்பான விபர அட்டவணை இல்லாதமை.,<br>(5) ன்களின் கால வயது இல்லாதமை.<br>(6) அறவிடப்படமுடியாத கடன்களுக்கான ஏற்பாடு இல்லாதமை. |
| (இ) முற்பணங்களும் வைப்புக்களும் | 1,00,891 | முற்பணங்கள் வைப்புக்கள் பற்றிய பதிவேடு பேணப்படாதமை, |
| (ஈ) கடன்கொடுத்தோரும் சிறுகச் சேர்ந்த செலவினமும் | 3,31,556 | (1) துணைப்பதிவேடும் கட்டுப்பாட்டுக் கணக்கும் பேணப்படாதமை.<br>(2) பொறுப்புக்கள் உறுதிப்படுத்தப்படாதமை.<br>(3) முன்னைய காலப்பகுதியிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட 4,110 ரூபா தொடர்பான விபர அட்டவணை கிடைக்காதமை. |
| (உ) ஆளணியினருக்குரிய வேதனங்கள் | 17,88,074 | (1) முகாமைக்காக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பும் சம்பளத்திட்டமும் இல்லாதமை. |

(....)

(2) அலுவலர்களை சம்பள நிலையில் அமர்த்திய தொடர்பான விபரங்கள் கிடைக்காதமை.

(ஊ) வங்கி மீதி 9,45,913 உறுதிப்படுத்தப்படாதமை.

2.6.6. அளவு மதிப்பிடக்கூடிய பிழைகள்.

அளவு மதிப்பிடக்கூடியதான கணக்காய்வில் கண்டுபிடிக்கப்பட்ட பிழைகள் கணக்குகள் மீது பின்வரும் விளைவுகளை ஏற்படுத்தியிருந்தன.

(அ) நிதிப்பெறுபேறு 3,05,320 ரூபாவால் குறைத்துச் சொல்லப்பட்டுள்ளது

(ஆ) தொழிற்படுமுதல் 7,56,000 ரூபாவால் குறைத்துச் சொல்லப்பட்டுள்ளது.

3. நிதி மற்றும் தொழிற்பாடு பற்றிய மீள் நோக்கு

3.1. நிதிப்பெறுபேறுகள்.

மீளாய்வுக்குரிய வருடத்துக்கான நிதிப்பெறுபேறு.

1981 செப்தம்பர் 16 ஆம் திகதி தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குரிய 2,35,067 ரூபாவுடன் ஒப்பிடுகையில் ரூபா 39,28,149 செலவை மிஞ்சிய வரவில் பேறுபெற்றுள்ளது. மேலேயுள்ள பந்தி 23 ல் சொல்லப்பட்டதுபோல அரசாங்க உதவுதொகையான ரூபா 78,00,000 முழுவதையும் வருடத்துக்கான வருமானமாகவும் மேலேயுள்ள பந்தி 2.6.2ல் சொல்லப்பட்டவாறு பயனச் செலவு எரிபொருள் கண்ணடிப்பொருள்போன்ற செலவினத்துக்கான 5,51,978 ரூபாவை முதலீடாகவும் கணக்கிடப்பட்டதால் இவ்வாறு ஏற்பட்டுள்ளது.

சம்பளங்களும் படிகளுமான ரூபா 28,16,459 ஆண்டுக்குரிய மொத்தச்செலவினத்தில் 72 சதவீதத்தையும் நிருவாக விதிப்பணங்களாக- ரூபா 6,24,478 அல்லது 16 சதவீதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளது. மீளாய்வுக்குரிய வருடத்தின்போது முகாமை பாதுகாப்புச் சேவைக்காகவும் 87,537 ரூபாவை செலவு செய்துள்ளது.

3.2. கடன் சேகரிப்பு

மீளாய்வுக்குரிய ஆண்டில் முகாமை 1981 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிலுவையாக விருந்த 61,475 ரூபாவில் 8,580 ரூபாவை மட்டுமே அறவிட்டுள்ளது.

3.3. செயலாளர் நியமனம்.

சட்டத்தின் 11 ஆம் பிரிவிற்கமைய 1982 ஜனவரி 18 ஆம் திகதியன்று

## 3.4. ஆராய்ச்சி வேலைத்திட்டம்.

முகாமை தனது தொழிற்பாடுகளை 1981 செப்தம்பர் மாதத்தில் ஆரம்பித்த தாயினும் 1982 மே மாதத்தில் மட்டுமே ஆராய்ச்சி வேலைத்திட்டம் விஞ்ஞான தொழில்நுட்பக் குழுவால் வகுத்து அங்கீகரிக்கப்பட்டது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

(அ) முகாமை நிருவாகிகளுக்கான எனது விபரமான அறிக்கையில் முறைமைகள் கட்டுப்பாடுகள் என்பனவற்றின் வடிவமைப்பு செயற்பாடு தொடர்பாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் விபரிக்கப்பட்டுள்ளன. அவை பின்வரும் துறைகளைச் சார்ந்தவையாகும்.

(1) அதிகாரத்தை கையளித்தல்.

(2) உள்ளகக் கட்டுப்பாடு

(3) காசு

(4) நிலையான சொத்துக்கள்

(5) ஊழியர் பாதுகாப்பு

(6) வரவு செலவு மதிப்பீடு

(7) ஆளணியினர்

(8) ஆராய்ச்சிக் கருத்திட்டம்.

(9) மோட்டார் வாகனங்கள்.

(ஆ) நடைமுறைக் கைந்நூல்.

முகாமை அதன் செயற்பாட்டுக்கான நடவடிக்கை முறைமைகளையும், விதிகள் பிரமாணங்களையும் ஆக்கா[illegible]து.

(இ) உள்ளகக் கணக்காய்வு.

1982 மே மாதம் 1 ஆம் திகதியிலிருந்து உள்ளகக் கணக்காய்வு அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டாராயினும் நிதிச்சட்டத்தின் 13(5) (ஈ) பிரிவில் தேவைப்படுத்தப்பட்டவாறு எனது அங்கீகாரத்துக்காக ஒரு உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கேட்கப்பட்ட போதிலும் சமர்ப்பிக்கப்படவில்லை. உள்ளகக் கணக்காய்வு அலுவலர் அவருடைய நியமனத் திகதியிலிருந்து நிருவாக அலுவலர் கடமையை ஆற்றியுள்ளார். இத் தேவைக்காக அவருக்கு மாத மொன்றுக்கு ரூபா 750/- மேலதிகப்படி செலுத்தப்பட்டு வந்துள்ளது.

ஒப்பம்
பதில் கணக்காய்வாளர் அதிபதி.

## கணக்காய்வாளர் அதிபதியின் சான்றிதழ்

1982 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமையின் கணக்குகளாவன, 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரைக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) (இ) பிரிவின் பிரகாரம் வெளியிடப்படவேண்டியதான இக்கணக்குகள் மீதான எனது அவதானிப்புகளாவன முகாமையின் தவிசாளருக்கு அனுப்பப்பட்ட சமதிகதியைக் கொண்ட எனது அறிக்கையில் காணப்படுகின்றன.

ஒப்பம்
பதில் கணக்காய்வாளர் அதிபதி
1984 ஒக்டோபர் 18.

## 1982-12-31ல் உள்ளவாறான ஐந்தொகை

| | | | |
|---|---|---|---|
| **உதவுதொகை** | | | |
| 1981 ஆம் ஆண்டுக்கு | | | 71,34,000.00 |
| 1982ஆம் ஆண்டுக்கு | | | 78,00,000.00 |
| | | | 1,49,34,000.00 |
| **ஈடுபடுத்தப்பட்ட உதவுதொகை** | | | |
| 1982-01-01 ல் மு/கொ.மீதி | | | 64,16,067.01 |
| 1982 ஆம் ஆண்டு மீதி | | | 39,28,148.95 |
| | | | 1,03,44,215.96 |
| **உதவுதொகையின் ஈடுபாடு** | | | |
| நிலையானசொத்து (மூலதனச் செலவினம்) | | | |
| கட்டிடங்கள் | 21,49,948.16 | | |
| பொறித்தொகுதி சாதனங்கள் | 4,78,761.79 | | |
| வாகனங்கள் | 6,53,863.09 | | |
| தளபாடங்கள் | 1,71,537.05 | | |
| நூலகப் புத்தகங்கள். சஞ்சிகைகள் | 79,235.80 | | |
| விசேட கருத்திட்டம் | 3,50,000.00 | | |
| பிரயாணச்செலவும் உணவுப்படியும் | 1,62,691.62 | | |
| எரிபொருள் | 1,09,648.65 | | |
| வெளிநாட்டுப்பயணம் | 1,45,012,90 | | |
| கண்ணாடிப்பொருளும் நுகர்பொருளும் | 1,34,623.74 | | |
| | | 44,35,322.80 | |
| கழி தேய்மான ஏற்பாடு. | | 1929.00 | |
| | | | 44,33,393.80 |
| **நடைமுறைச்சொத்துக்கள்.** | | | |
| சில்லறைக்கடனாளிகள் (அட்.1) | 52,03,295.51 | | |
| வைப்புக்கள் (அட்.2) | 22,500.00 | | |
| முற்பணமும் வைப்புக்களும் (அட். 3.4.5.6.7) | 78,390.85 | | |
| வங்கியும் காசும் | 9,45,912.88 | | |
| | | 62,50,097,24 | |
| **கழி. நடைமுறைப்பொறுப்புக்கள்.** | | | |
| கடன்கொடுத்தோரும் சிறுகச் சேர்ந்த செலவுகளும் (அட்.8,9) | 3,31,556.33 | | |
| வைப்புக்கள் (அட்.10) | 7,720.75 | | |
| | | 3,39,277.08 | |
| | | | 59,10,822.16 |
| | | | 1,03,44,215.96 |

கலாநிதி நிரான் டபி. ஜயவர்தன,

## தேசிய நீரியல் வள முகாமை, மட்டக்குளி

### 1982 டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான வரவு செலவுக் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| ஆண்டுக்கான உதவுதொகை | | | 78,00,000.00 |
| சில்லறை வருமானம் | | | 1,499.75 |
| | | | 78,01,499.75 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | |
| **நிருவாகச் செலவுகள்** | | | |
| சம்பளங்கள் | 17,88,073.86 | | |
| படிகள் | 6,81,413.04 | | |
| ஊழியர் சேமலாப நிதி | 2,11,153.44 | | |
| மேலதிகநேர வேலைக் கொடுப்பனவு | 64,410.24 | | |
| ஓய்வூதிய உதவுதொகை | 14,793.50 | | |
| பயணச் செலவு | 42,567.36 | | |
| பாதுகாப்பு கட்டணங்கள் | 87,537.24 | | |
| கட்டணங்கள் | 11,707.75 | | |
| எரிபொருள் | 38,042.33 | | |
| சீருடைகள் | 4,650.00 | | |
| உசாவுநர் கட்டணங்கள் | 26,596.77 | | |
| விளம்பரம் | 73,987.39 | | |
| எழுதுகருவிவகைகள் | 1,24,408.98 | | |
| தபாற் செலவுகள் | 11,019.80 | | |
| உபசரணை | 30,384.50 | | |
| சேமநலம் | 9,397.33 | | |
| தொலைபேசி | 42,892.58 | | |
| சில்லறை | 32,500.25 | 32,95,542.66 | |
| **தாபனச் செலவுகள்** | | | |
| பேணல் | 2,65,908.81 | | |
| மின்சாரம் | 1,64,158.33 | | |
| நுகர்பொருளும் கண்ணாடிப் பொருளும் | 1,34,459.00 | | |
| வாடகை, வீதங்கள் | 11,353.00 | | |
| தேய்மான ஏற்பாடு | 1,929.00 | | |
| ஏனையவை | – | 5,77,808.14 | 38,73,350.80 |
| | | | 39,28,148.95 |

ஒப்பம் கலாநிதி கிரான் ஜயவர்த்தன
தவிசாளர்

1983 செப்டம்பர் 19

ஒப்பம் கலாநிதி எம்.கே. ஒனில் பெரேரா
பணிப்பாளர் நாயகம்

1983 செப்டம்பர் 19.